தீபாவளியை முன்னிட்டு

# மெட்ரோ ரயிலில் 2 நாளில் 3 லட்சம் பேர் பயணம்

சென்னை, அக்.27: தீபாவளியை முன்னிட்டு சென்னை மெட்ரோ ரயிலில் கடந்த நாளில் 3 லட்சத்து 4 ஆயிரத்து 237 பேர் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இருந்து தங்களின் சொந்த ஊர்களுக்கு செல்ல பேருந்து நிலையங்களிலும், ரயில் நிலையங்களிலும் கூட்டம் அலைமோதி காணப்படுகிறது. நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் சென்னையில் இருந்து 2 லட்சத்து 52 ஆயிரம் பேர் தங்களின் சொந்த ஊர்களுக்கு பயணப்பட்டுள்ளனர். இதேபோல், தீபாவளியை முன்னிட்டு கடந்த 2 நாட்களில் மெட்ரோ ரயில் சேவையை 3,04,237 பேர் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ ரயில் அதிகாரி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் கூறியதாவது:

தீபாவளியை முன்னிட்டு கோயம்பேடு, கிண்டி பேருந்து நிலையங்களில் இருந்து அதிகமானோர் சொந்த ஊர்களுக்கு பயணப்படுவார்கள். அவர்களுக்கு மெட்ரோ ரயில் சேவை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. வண்ணாரப்பேட்டையுடன் முதல் வழித்தட திட்டம் நிறைவுபெற்ற பிறகு, அதாவது கடந்த பிப்ரவரி மாதத்திற்கு பிறகு 24,25ம் தேதிகளில் தான் அதிமானோர் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தியுள்ளனர்.

அதன்படி, கடந்த 24ம் தேதி 1 லட்சத்து 39 ஆயிரத்து 324 பேரும், 25ம் தேதி 1 லட்சத்து 64 ஆயிரத்து 913 பேரும் என மொத்தம் 3 லட்சத்து 4 ஆயிரத்து 237 பேரும் பயணம் செய்துள்ளனர். முன் எப்போதும் இல்லாத வகையில் மெட்ரோ ரயில் நிலையங்களிலும் கூட்டம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, விமானநிலையத்தில் இருந்து 12 ஆயிரம் பேரும், சென்ட்ரலில் இருந்து 10 ஆயிரம் பேரும், திருமங்கலத்தில் இருந்து 9 ஆயிரம் பேரும், ஆலந்தூர் மற்றும் வடபழனியில் இருந்து 6 ஆயிரம் பேரும், உச்சநீதிமன்றத்தில் இருந்து 4 ஆயிரம் பேரும் சேவையை பயன்படுத்தியுள்ளனர். பயணிகளுக்கு சிரமம் ஏற்படாத வகையில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த ஊழியர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கூறினார்.